விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 087 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 02 புதன்கிழமை (16.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



# அலைகடலென திரண்ட மக்கள் அரசுக்கு எதிராகப் போராட்டம்

## கொழும்பு நகரே முடங்கியது; ஜனாதிபதி செயலகம் முடக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புப் பேரணியில் அலை கடலாக திரண்ட பொதுமக்கள் கூட்டத்தால் கொழும்பு நகரே நேற்று முற்றாக முடங்கியது. (15ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி தேர்தலை நடத்துங்கள்

# அரசை வீட்டுக்கு அனுப்பும் வரை ஓயமாட்டோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபதம்


(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை அரசு நடத்த வேண்டும். மேலும் கோட்டாபய அரசை வீட்டுக்கு அனுப்பும்வரை ஓயமாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - கூட்டமைப்பு பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

### 25ஆம் திகதி நடைபெறும் என அறிவிப்பு





(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஜனாதிபதி செய 15

## மதுபானங்களின் விலைகளும் அதிகரிப்பு

(கொழும்பு)

உள்நாட்டில் தயாரிக்கப்படும் அனைத்து மதுபானங்களின் விலைகளும் உடன் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, 750 மில்லி லீற்றர் அதிவிஷேசம் மதுபான போத்தலின் விலை 100 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக DCSL நிறு 15

### 60 வகையான

# மருந்துப் பொருட்களின் விலை அதிகரிப்பு

## அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

60 வகையான மருந்து பொருட்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, மருந்துப் பொருட்களின் 15

### அரசை கவிழ்க்கும் எண்ணமில்லை

# அரசியல் கட்சிகளிடையே உடன்பாடு வேண்டும்

## தற்போதைய பொருளாதார நிலை தொடர்பில் ரணில்



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை அமைக்கும் யோசனையை நிராகரித்துள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்கும் எண்ணமில்லை என்றும் தெரிவித்தார். 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி

## அமைச்சரவை அனுமதி

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயை, ஒருமுறை மாத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. நீதி அமைச்சர் அலிசப்ரியால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2016ஆம் ஆண்டு 17ஆம் இலக்க காணாமல்போனோர் பற்றிய அலுவலக சட்டத்தின் மூலம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு, இறப்புச் சான்றிதழ் அல்லது காணக்கிடைக்கவில்லை என்ற சான்றிதழை வழங்குவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த அலுவலகத்தால் கண்டறிப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழைப்பெற்றுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின், குடும்பத்தினருக்கே இவ்வாறு தலா ஒரு இலட்சம் ரூபா நிதியை, ஒருமுறை மாத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (ம)

மின்வெட்டு நேரத்தில்

# ஜனாதிபதி கோட்டா இன்று மக்களுக்காக உரையாற்றுவார்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு இன்று இரவு 8.30 இற்கு உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு புதன்கிழமை உரையாற்றுவார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நேரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. உரையாற்றுவது தொடர்பிலான நேரம், நேற்றைய தினமே அறிவிக்கப்பட்டது.

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றும் நேரத்தில், பல இடங்களில் மின்வெட்டு அமுலில் இருக்கும் என்று அறியமுடிகின்றது. (ம)

# நாட்டில் நேற்று மேலும் +428 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 428 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 656,814 ஆக அதிகரித்துள்ளது. (ம)


**சிறுநீரகம் தேவை**

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 45 வயது நபருக்கு உறுப்பு மாற்று சிகிச்சை செய்வதற்கு O+ அல்லது O- குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(C-3978)
077 620 3932, 076 322 1975



**மணிவிழா வாழ்த்து**




திருமதி
மேரி ஜெயா புனிதமணி ஜஸ்ரின் விக்னராஜ்
( Trd. in Christianity, SLPS - I )
[ பிரதி அதிபர் – கிளி / பாரதி வித்தியாலயம் ]
1989 - 2000 வரை ஆசிரியையாகவும் 2000 - 2022 வரை அதிபர் சேவையிலும் 33 வருடங்கள் கல்விப் பணியாற்றி 01.03.2022 அன்று 60 ஆவது அகவையில் ஓய்வுபெற்ற மணிவிழா நாயகிக்கு மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரது ஓய்வுக் காலம் இனிதாய் அமைய வாழ்த்துகின்றோம்.
(C-3977)
ஆசிரியர் நலன்புரிச் சங்கம், பாடசாலைச் சமூகம்
கிளி/பாரதி வித்தியாலயம்



**ரொட்டி வேலையாள் தேவை**

சாவகச்சேரியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு ரொட்டி வேலையில் அனுபவம் உள்ள பணியாளர் தேவை. தகுதியுடையோர் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(C-3976)
T.P - 077 649 1027



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



**வேலை வாய்ப்பு**

எமது W.E.C நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையை கருத்திற் கொண்டு மிகக்குறைவான தகைமை அடிப்படையில் இளைஞர், யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். முன்அனுபவம் ஏதுமின்றி பயிற்சியுடன்கூடிய தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும். நேர்முகத் தேர்வின்போது தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பயிற்சியின் போது நிறுவனத்தினால் கொடுப்பனவுகள் வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் கவர்ச்சிகரமான ஊதியம் பெற்றுக்கொள்ளலாம்.
(10651)
077 174 3524, 077 062 1631



**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்!
0779086737 GUNA BEST PC
379 கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.
522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்.
கணினி லப்டொப் பிறின்டர் ஸ்மார்ட்போட் சிசிரிவி கமரா - விற்பனை திருத்தம்
Computer Laptop Printer Smart Board CCTV Camera - SALE & REPAIR
(10650)



**விற்பனைக்குண்டு**

மன்னார் மாவட்டம் பள்ளிமுனை மேற்கு பள்ளிமுனையில் இருக்கும் 1 3/4 பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு.
(10641)
076 707 9792
077 806 0713
074 053 3808



**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி மதிவதனி சிவானந்தநாதன்
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
ஆறுமுகம் இராசையா
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(10653)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி



**ரொட்டி மா குழைக்கும் மெசின் விற்பனைக்குண்டு**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரே தடவையில் 25 Kg ரொட்டி மாவினை தானாக குழைத்து பதப்படுத்தித் தரக்கூடிய நவீன முறையில் தயாரிக்கப்பட்ட ரொட்டி மா குழைக்கும் மெசின் விற்பனைக்கு உண்டு.
கூடிய விலைக்கழிவு வழங்கப்படும்.
(C-3975)
077 649 1027



**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-3942)
0768226240 DHL



**கண்ணீர் அஞ்சலி**



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி இ. உதயச்செல்வி
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
கிஸ்ணபிள்ளை ஆழ்வாப்பிள்ளை
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(10657)
நலன்புரிச் சங்கம்
விவசாய அமைச்சு, வடக்கு மாகாணம்.



**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரி ஆசிரியர்
திரு. ரவீந்திரன் சிறிரமணன்
அவர்களின் அன்பு மாமனார்
அமரர்
சின்னத்தம்பி ஆறுமுகம்
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(10655)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி



A/L PHYSICS & CHEMISTRY
(10648)
Personal & Group Classes
-076 322 0916


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு நாசம்! நாட்டைக்காப்போம்!

# ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம்

**(கொழும்பு)**

**அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுக்கு தீர்வினை வழங்குமாறு கோரி நேற்று பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது.**







ஐக்கிய மக்கள் சக்தியினர் இதனை ஏற்பாடு செய்தனர்.

எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் கொழும்பை நோக்கி வந்தனர்.

'நாடு நாசம் - நாட்டைக் காப்போம்' என்ற தொனிப்பொருளில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு பேரணியில் ஐக்கிய ஊழியர் சங்கம், ஐக்கிய மகளிர் அமைப்பு, சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர். (நி)

# தொடரும் அவல நிலை
## 4 எரிபொருள் கப்பல்கள் ரத்து

(கொழும்பு)

இந்த வார இறுதிக்குள் இலங்கையில் டீசல் தட்டுப்பாடு முடிவுக்கு வரும் என அதிகாரிகள் கூறினாலும், பிரச்சினை தொடரும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாளை மற்றும் நாளை மறுதினம் வரவிருந்த நான்கு பெற்றோல் மற்றும் டீசல் கப்பல்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமானது சுமார் 7000 தொன் டீசல் உற்பத்தித் திறன் கொண்டுள்ளதாகவும் மசகு எண்ணெய்க் குறைவினால் இன்னும் சில நாட்களில் சுத்திகரிப்பு நிலையத்தை மூட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (நி)

# வாசுவின் பதவிக்கு
## புதியவரை நியமிக்க திட்டம்



(கொழும்பு)

வாசுதேவ நாணயக்கார வகித்து வரும் நீர் வழங்கல் அமைச்சர் பதவியில் வேறு ஒருவரை நியமிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தென்னிலங்கை சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அமைச்சர் வாசுதேவ அமைச்சின் பணிகளில் இருந்து விலகி இருப்பதன் காரணமாக அமைச்சுக்கு நிர்வாக ரீதியாக சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்தே அரசாங்கம் இது சம்பந்தமாக கவனம் செலுத்தியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற அரசாங்கம் உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் முதல் சந்தர்ப்பத்திலேயே தான் அமைச்சர் பதவியில் இருந்து விலகி விடுவேன் என நாணயக்கார ஏற்கனவே கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சர்வதேச நாணய நிதியத்தின்
## ஆதரவைப் பெற அமைச்சரவை இணக்கம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது டொலர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் பொருட்களை இறக்குமதி செய்வதில் பல்வேறு சிக்கல் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

இதனால் நாட்டு மக்கள் எரிபொருள், சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நாள்தோறும் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உக்ரைன்- ரஷ்யாவிற்கான
## தேயிலை ஏற்றுமதி இடைநிறுத்தம்

### தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவிற்கும், உக்ரைனுக்கும் தேயிலை ஏற்றுமதி செய்வது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உக்ரைன்-ரஷ்ய போர் காரணமாக இவ்வாறு தேயிலை ஏற்றுமதியை இடை நிறுத்தியதாக தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

போர் நிலைமையினால் குறித்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான பணத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் கப்பல் நிறுவனங்கள் அந்த நாடுகளுக்குச் செல்ல தயக்கம் காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலிருந்து கூடுதலாக தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் வரிசையில் ரஷ்யா மூன்றாம் இடத்தை வகிக்கின்றது.

தேயிலை ஏற்றுமதி செய்ய முடியாத நிலைமை உருவாகினால் அது நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கும் என பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கையில் பொருளாதாரம் படுமோசம்
## தனது பிரஜைகளை எச்சரித்த கனடா

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் சீரற்ற பொருளாதார நிலைமை காரணமாக உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என கனடா இலங்கைக்கு பயண ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

இலங்கையில் பொருளாதாரம் மோசமடைந்து வருவதாகவும் இதன் காரணமாக மருந்துகள், எரிபொருள், உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் கனடா தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது டெஸ்டிலும் இலங்கை தோல்வி

# தொடரை வென்றது இந்தியா

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 238 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டுபோட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரை, இந்திய அணி 2-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.

பெங்களூர் மைதானத்தில் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமான இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 252 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஸ்ரேயஸ் ஐயர் 92 ஓட்டங்களையும் ரிஷப்பந்த் 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், லசித் எம்புல்தெனிய மற்றும் பிரவீன் ஜயவிக்கிர ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் தனஞ்சய டி சில்வா 2 விக்கெட்டுகளையும் லக்மால் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை கிரிக்கெட் அணி, 109 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மத்தியூஸ் 43 ஓட்டங்களையும் டிக்வெல்ல 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பும்ரா 5 விக்கெட்டுகளையும் அஸ்வின் மற்றும் ஷமி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் அக்ஸர் பட்டேல் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



143 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 303 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்திருந்த போது, தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது. இதனால், இலங்கை அணிக்கு 447 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஸ்ரேயஸ் ஐயர் 67 ஓட்டங்களையும் ரிஷப்பந்த் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பிரவின் ஜயவிக்கிரம 4 விக்கெட்டுகளையும் எம்புல் தெனிய 3 விக்கெட்டுகளையும் விஷ்வ பெனார்டோ மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 447 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிங்கிய இலங்கை கிரிக்கெட் அணி, 208 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்திய அணி 238 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இதன்போது இலங்கை அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, திமுத் கருணாரத்ன 107 ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், அஸ்வின் 4 விக்கெட்டுகளையும் பும்ரா 3 விக்கெட்டுகளையும் அக்ஸர் பட்டேல் 2 விக்கெட்டுகளையும் ஜடேஜா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2535


### சர்மி

"எங்கள் மீது பொருளாதார தடை விதிக்கும் நாடுகளுக்கு எதிராக பொருளாதாரத்தடை"




அவங்க எங்க நாட்டு மேல பொருளாதாரத்தடை போடுவாங்க பதிலுக்கு நாங்க அவங்க நாட்டு மேல பொருளாதாரத்தடை போடுவோம் இதுலாம் எங்களுக்குள்ள ஒரு விளையாட்டு...

### கீர்த்தன்



அமைதியாக இருப்பது மிக மிக கொடுமையான விஷயம். அப்படி இருக்க பழகிவிட்டால் நிம்மதி நம்மைத்தேடி வரும்

### டிலானி

உறைக்கிற மாதிரி ஒரு வார்த்தை

ஏன்யா பணத்தை மட்டும் கரெக்டா பாங்கில போடுறீங்களே

அது மாதிரி குப்பையையும் குப்பை வண்டியில் போட்டால் என்ன?



### சாரங்கன்



அம்மா: பேசினா தீராத சண்டை எதுவுமில்ல போர் தேவையில்லாத ஒன்று

மகன்: நீ ஏன் பக்கத்து வீட்டுக்காறரோட கூட பேசல.

அம்மா: அவ சோப்பு போட்டா தண்ணி நம்ம வாசல் பக்கம் வருது அதான்..

### பர்மினி

Srilanka Govement

Petrol இல்ல, கரண்டு இல்ல, டொலர் இல்ல, பொருட்கள் இல்ல, கடன் வாங்காத நாடு கூட இல்ல

Public

போதும் போதும் இது ஒரு நாடே இல்ல

### டயான்



கேட்கிறார்கள் என்று பேசிக் கொண்டே இருக்காதீர்கள்... ஒரு வேளை அவர்களுக்கு நேரம் போகாமல் கூட இருக்கலாம்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நிலையில் நாடு இந்தியா பறந்தார் பசில்



(கொழும்பு)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று பிற்பகல் இந்திய தலைநகர் டில்லி நோக்கிப் பயணமானார்.

நிதி அமைச்சரின் இந்த இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தில், திறைசேரி செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவும் இணைந்துள்ளார்.

இந்தியாவுடனான ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நோக்கில் அவர் இந்தியா சென்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் மூலம் இலங்கைக்கு அரிசி, கோதுமை மா மற்றும் சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு உதவுவதற்காக இந்திய அரசாங்கம் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை

## சன்ன ஜயசுமண தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எந்த வகை மருந்துகளுக்கும் தற்போது தட்டுப்பாடு இல்லை என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

அரசியல் இலாபங்களுக்காக நாட்டில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் ஊடாக பல்வேறு பொய்யான அறிக்கைகள் வெளியிடப்படுவதாக அவர் தெரிவித்தார். (நி)

# மசகு எண்ணெய் இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது

(கொழும்பு)

ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கான நீண்ட கால ஒப்பந்தத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த ஒப்பந்தம் ஐக்கிய அரபு இராச்சியத்தின் கொரல் எனர்ஜி நிறுவனத்திடம் வழங்குவதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது. (நி)


# அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்ப மகா சங்கத்தினர் தயார்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

(கொழும்பு)

**அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப மகா சங்கத்தினர் தயாராக இருப்பதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்திற்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களையும் மகா சபையில் இணையுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,



“தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தனர்.

நாடு முழுவதும் உள்ள சுவர்களில் ஓவியங்களை வரைந்து இளைஞர்கள் அளவற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு மகா சங்கத்தினர் முன்வந்து நல்லதொரு தலைவரை நியமித்ததில் அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால் அந்த மகிழ்ச்சி இன்றைக்கு முற்றிலும் போய் விட்டது. இந்த அரசாங்கத்தை உருவாக்க நாங்கள் கடுமையாக உழைத்தோம். நாங்கள் ஆட்சியாளர்களை தர்மத்தில் உபதேசித்தோம். ஆனால், நாளுக்கு நாள் குறைகள் அதிகரித்து, முன்னெப்போதும் இல்லாத பேரழிவிற்கு மக்கள் ஆளாகியுள்ளனர்.

கொவிட் பேரழிவு, டொலர் பற்றாக்குறையை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. விவசாயிகள் வீதிக்கு வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

மற்ற நாடுகளில் பொருட்களின் விலை 5-10 ரூபாய் வரை அதிகரிக்கப்படுகிறது. இன்று பொருட்களின் விலை ஆயிரக்கணக்கில் அதிகரித்து வருகிறது. பெற்றோல், டீசல் இழப்பு ஏற்பட்டுள்ளது. எரிவாயு - மின்சாரம் இல்லை. இந்நிலையில், அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று பலர் கூறுகிறார்கள்.

பசில் ராஜபக்ஷ நிதியமைச்சராக பதவியேற்ற பின்னர் இருந்தவை இல்லாமல் போய்விட்டன என இன்று பலரும் கூறுவதை தயக்கத்துடன் கூற வேண்டியுள்ளது.

இந்நிலையில், குறைந்தது 6 மாதங்களாவது பசில் ராஜபக்ஷ விலகி இருக்க வேண்டும்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

16.03.2022
பங்குனி 02, புதன்கிழமை
திரியோதசி பிற்பகல் 1.49 மணிவரை

மகம் பின்னிரவு 12.37 மணிவரை
சுபநேரம்- 4.50-6.20 மணிவரை
இராகுகாலம் -12.20-1.50 மணிவரை

சித்தாமிர்தம், சந்திராஷ்டமம்
உத்தராடம்,திருவோணம்

வளவன்




பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, செய் தொழிலில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ரோக பயமுண்டு, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்,உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.




நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டுகொள்வீர்கள்.




சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், மனதில் தேவையற்ற சஞ்சலங்களை தவிர்ப்பது நல்லது.




அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.

தன்னை ஆளத் தெரியாதவன் பிறரை ஆள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2021 (2022) முடிவுகள்

**கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை**

ச.தர்மிகா-175, சி.அனுசியா-161, மு.சாருஜா-161, ஜெ.கிஷானா-158, வ.கதிர்கா-156, சி.கிருத்திகா- 154, ம.விதுயா-154, ர.கீர்த்தனா 152, உ.மயூசன்-150, ப.விநீஸ்-149.

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

வி.அனந்தஜித் - 189, தே.அபிஷேக் 181, ஸ்ரீ.பவிஷா-181, த.சுலக்ஷன் -179, ர.தீபிகா-178, சு.கரிஸ்-172, கி.கஜலவன் 171, ஜெ.திலக்ஷனா-171, பி.ஜனோதன்-170, க.சாம்எட்வின் -169, க.கஜராம்-168, ய.யதுநாத்-163, ஜீ.ரிசேனியா-163, ரா.சோபிகா- 160, வி.ஸகீர்ஸன்-160, சி.அனுஸ்கவி-156, இ.விதுஷானன்-155, சு.அஸ்வின்-154, ஜெ.கர்ணிகா-154, இ.தரணிகா-152, ம.விதுஜா-152, ஈ.கவிசன்-152, ஜெ.தனவர்ஷினி-151, ச.சாருஜன்-151, சௌ.கோபிநாத்-151, செ.கஸ்வின்-149, சி.விஜிதன்-149, த.பிரதீபனா- 149, ச.ஐஸ்வர்யா-149, த.அஜிராம்-148.

**கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்**

கே.கரிசனன்-182, அ.அஸ்விதன்-178, செ.அபிஸ்கன்- 173, சி.அம்புஜன்-163, க.ஜஸ்வினா-163, த.சிஜாம்-161, பி.லிந்துஜன்-160, செ.ஸ்ரீசங்கவி-159, ச.நிஷாந்-159, சி.மதுஷிகன்-159, ச.திஷ்னுதரன்-157, ப.சதுர்ஷியா-156, சு.ஹரீஸ்-155, ர.ராகவி-153, கே.ஆதர்ஷ்-150, உ.அபிஷயன்-149, வி.ஆகாஷ்-149.

**அருணோதயக் கல்லூரி அளவெட்டி**

கு.பிரதீபன்-182, க.சஜீன்-179, லோ.ரக்சிகா-174, த.வைஸ்ணவி-168, சி.ஹர்சாயினி-166, ச.சகாயடொறிற்றா-165, சு.கோணுஜா-165, க.நயனி-163, சு.சங்கவி-161, உ.ஜான்சிகா-160, கா.மாதேஸ்-159, சு.லக்சியன்-157, பி.வேதநிலவன்-153, சி.லக்சனா-152, அ.டினோயன்-152, பா.ஆரங்கி-151, கி.ரசிதா-151, சி.விஷால்-150, வி.ஜிந்துசா-149, ந.அம்சிகன்-148.

**கிளி/சோரன்பற்று சி.சி. த.க.பாடசாலை**

க.விதுர்சிகா-174, நி.ஜதுசன்-160.

**வட இந்து ஆரம்பப் பாடசாலை**

க.சக்தியா-188, ஜோ-அக்ஷிகா-180, க.அங்கவி-178, கி.அன்ரொய்ஸ்ரன்-178, ர.சாய்சரன்-175, தே.அக்ஷயா-174, ச.தருண்-171, க.டானுஷாய்-171, சு.சஸ்வென்-171, ரோ.யுவநிதன்-170, கா.சங்கீர்த்தன்-170, கா.அபிஷன்-170, மொ.தீபாதஹனி-169, க.ஏஞ்சலின் அபிநயா-169, சி.சானுஜா-167, செ.டர்வினி-164, ஜெ.லதுசிகா-163, து.தாருகன்-163, ல.சுபக்ஷனா-162, கி.யஸ்மிகா-161, பா.ஜனார்த்தனி-161, கி.அனுஷிகா-160, சி.வேணுஜன்-159, றி.சியான் சாமுவேல்-158, ரா.லதாங்கி-157, கு.அக்ஷிதா-157, தீ.வரதகர்ஷன்-156, சி.ஹர்சா-156, வா.கஜானன்-155, த.லிஷானி-155, சி.சங்வை-150, ச.நிரக்சயா-149, ஜெ.ஜஸ்மிலா-148. (60-110-105)

## கிளிநொச்சி ம.வி. மாணவன் மாவட்ட நிலையில் முதலிடம்



(தருமபுரம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் லிங்கராஜா தஸ்வின் 193 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். (5-4-316)

## தேசிய நிர்மாண சங்கத்தின் நிர்வாகத் தெரிவு

### நிர்மாண துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பிலும் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய நிர்மான சங்கத்தின் 36 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த மாதம் 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவராக தேசமான்ய சுசந்த ரஞ்சித் லியாநாய்ச்சி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். மேலும் தேசிய ஆளுநர் சபைக்கு வட மாகாணத்தின் பிரதிநிதியாக வடமாகாண கிளையின் தலைவர் அன்ரனி அன்ரன் றேமன்ஸ் சரூல் போட்டியின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

குறித்த கூட்டத்தில் நாடு முழுவதும் எதிர்நோக்கியுள்ள பேரிடர் நிலைமையில் நிர்மானத்துறையினர் எதிர்நோக்கும் கட்டட நிர்மாணப் பொருட்களுக்கான அபரிமித விலை அதிகரிப்பு, கொடுப்பனவு தாமத நிலைகள் போன்ற முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு அவற்றிற்கான பரிகாரங்களை துணிவதற்கான முயற்சிகளை விரைவாக மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன் உடனடி நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிர்மாண அபிவிருத்தி நிலையத்தினால் (Construction Development Centre) தயாரிக்கப்பட்ட "விலையேற்றத்தினை எம்மால் உரிய பொறிமுறைகளூடாக அணுகி நிர்மானத்தினை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்க முடியும் என்ற பூர்வாங்க அறிக்கையினை வடமாகாணக் கிளையினால் தேசிய செயலகத்தினூடாக (NCASL) விதந்துரைந்தபடி நிர்மாணப் பயிற்சி மாற்றம் அபிவிருத்திக்கான (CIDA) நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு ஆவன செய்யப்பட்டது. (4-5)

## கட்டாக்காலிகள் பிடிக்கப்பட்டால் அபராதம் 1600 ரூபாய்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட வயல் நிலங்களில் உள்ள சிறுதானியப் பயிர்களுக்கு சேதம் விளைவித்த 4மாடுகள் கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விவசாயிகளால் பிடிக்கப்பட்டு கமக்கார அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிடிக்கப்படும் மாடு ஒன்றிற்கான பராமரிப்பு மற்றும் தண்டப்பணமான 1600ரூபாய் பணத்தை உரிமையாளர் கைதடி கமநல சேவை நிலையத்தில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை கமக்கார அமைப்பினரிடம் காண்பித்து மாடுகளை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனங்கிளப்பு பகுதியில் இம்முறை விவசாயிகள் ஆர்வத்துடன் சிறுதானியச் செய்கையில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் கட்டாக்காலிகளின் தொல்லை காணப்படுகின்றமையால் கமக்கார அமைப்பினர் குழுவொன்றை நியமித்து பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தும் கட்டாக்காலிகளை பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

## புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் மன்னார் மாவட்ட ரீதியில் முதலிடம்

(மன்னார்)

ஒரு மருத்துவராக வந்து மக்களுக்கு சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியம் என தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் நிலை வகிக்கும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் கேதீஸ்வரலிங்கம் எபிஸ்டனி தெரிவித்தார்.

நான் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு உதவியவர்கள் பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஆவர்.

எதிர்காலத்தில் மருத்துவராக வந்து சேவையாற்ற



வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

அந்த வகையில் நான் தொடர்ந்து சிறப்பாக கல்வி கற்று எனது பெற்றோருக்கும் பாடசாலைக்கும் புகழைத் தேடித் தருவேன் என மாணவன் எபிஸ்டனி தெரிவித்தார். (5-4-285)

## 192 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் முதலிடம்



(நெளுக்குளம்)

தரம் ஐந்து புலமைபரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவன் அரவிந்தன் அபிரான் மாவட்ட மட்டத்தில் முதல்நிலை சித்தியினைப் பெற்றுள்ளார்.

2021 ஆம் ஆண்டிற்கான தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளிவந்திருந்தன.

அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியால மாணவன் அரவிந்தன் அபிரான் 192 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். (5-4-299)




"அருந்ததியின் மாற்று மோதிரம் நிகழ்வும் மணப்பெண் அலங்காரமும்" கண்காட்சியை அழகுக் கலையில் 37 வருடங்களாக [illegible] பயிற்சியகத்தின் இயக்குநர் [illegible] ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் அண்மையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"உக்ரைன் - ரஷ்ய போரும் உலகளாவிய அதன் தாக்கமும்" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல் நாளை 17 ஆம் திகதி வியாழக்கிழமை (போயா தினம்) பிற்பகல் 3.30 மணியளவில் இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலின் ஆரம்ப உரையினை சிரேஷ்ட ஊடகவியலாளர் க.வேல்தஞ்சன ஆற்றவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-4)

## மணவாளக் கோல திருவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் மணவாளக் கோலத்திருவிழா இன்று காலை 7.30 மணிக்கு பிள்ளையார் பூசையுடன் ஆரம்பமாகி அம்பாளுக்கு 1008 சங்காபிடேகமும் பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிடேகம் ஆராதனைகளும் இடம்பெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வருதலும் இடம் பெறும். (5)

## விசேட விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினரின் ஏற்பாட்டில் விசேட விரிவுரை இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பேராசிரியர் நிமாந்தி ராஜசிங்கம் "இழப்பின் நிலவரைபடங்கள் போருக்குப் பிந்தைய அபிவிருத்தியும் த.சனாதனனின் உயிரோட்டமான கலைப் படைப்புக்களும்" என்ற தலைப்பிலே விரிவுரையாற்றுவர். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 275 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதேவேளை ஸ்ரேர்லிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 360 ரூபாய் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (நி)

# தொடரூந்து கட்டணத்திலும் திருத்தம்

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)
தொடரூந்து பயணக் கட்டணத்தை விரைவில் சீரமைக்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பேருந்து கட்டணம், முச்சக்கர வண்டி கட்டணம் என்பன அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பால் மா தட்டுப்பாட்டுக்கு தீர்வு

(கொழும்பு)
உள்நாட்டு சந்தையில் நிலவும் பால் மா தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அடுத்த மாத ஆரம்ப பகுதியிலிருந்து குறையின்றி நாடு முழுவதிலும் ஹைலண்ட் பால் மாவினை பகிர்ந்தளிக்க மில்கோ நிறுவனம் தயார் நிலையில் இருப்பதாக, இராஜாங்க அமைச்சர் ரி.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் திரவப் பால் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதால் சந்தையில் பால் மாவிற்கு தட்டுப்பாடு நிலவியது.

அடுத்த மாதம் முதல் திரவ பாலையும் பால் மாவையும் சந்தைக்கு விநியோகிக்குமாறு தான் மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேனுக பெரேராவுக்கு பணிப்புரை வழங்கியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)


# NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31/01/2021 இற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு கீழ் குறிப்பிடப்படும் திகதிவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 03/04.2022 தொடக்கம் 09/04/2022 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01. | முல்லைத்தீவு, மல்லாவி. | 01/04/2022 | 03/04/2022 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 02. | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி | 01/04/2022 | 03/04/2022 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 03. | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் | 01/04/2022 | 03/04/2022 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 04. | வவுனியா | 01/04/2022 | 03/04/2022 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 05. | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை | 07/04/2022 | 09/04/2022 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 06. | மன்னார், வங்காலை | 07/04/2022 | 09/04/2022 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 07. | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் 2ம் கிளை, ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, கோப்பாய் | 07/04/2022 | 09/04/2022 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வடபிராந்திய முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி. (10642)


# கேன்களில் டீசல் நிரப்பத் தடை

## எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)
உடன் நடைமுறைக்கு வரும் வகையில் டீசலை கேன்களில் நிரப்புவதை நிறுத்துமாறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்தியங்களுக்கான நிர்வாக முகாமையாளர் மஹேஷ் அலவத்த தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த சட்டத்தை மீறும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் டீசல் விநியோகிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மின்கட்டண பில் புத்தகங்களும் தீர்ந்து விட்டதாம்

## வாடிக்கையாளர்களுக்கு சிறிய ரசீதுகளே விநியோகம்

(கொழும்பு)
இலங்கை மின்சார சபை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் மின்சாரக் கட்டணப் பட்டியல்களுக்குப் பதிலாக தற்போது சிறிய ரசீதை வழங்கி வருகிறது.

இதற்குக் காரணம் பழைய பில் புத்தகங்கள் காலாவதியாகிவிட்டதாகவும் புதிய பில் இன்னும் வரவில்லை என்றும் மானி வாசிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கான காகித இறக்குமதிக்குரிய அந்நியச் செலாவணி இல்லாததால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 11 ½ சூரி, செவ் 10 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/3514 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 32 ½ சூரி 10 செவ் 12<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் விரும்பத்தக்கது சைவபோசணம் முக்கியம்<br>தொ.இ:G/3618 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 37 சூரி 7 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி (கொழும்பில் வசிப்பது விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12414 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: சூரி, செவ் 9 இல் உயரம்: 5'5'<br>தகைமை/தொழில்: உயர்தரம் தாதி (தனியார்)<br>எதிர்பார்ப்பு: தனியார் அரச உத்தியோகம் வெளிநாடு ஆயின் கனடா, லண்டன், அவுஸ்ரேலியா<br>தொ.இ:G/12480 |
| பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: மகம்<br>கி.பா : 36 சூரி 5 செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc(Bio Technology) Micro Biologist<br>எதிர்பார்ப்பு :தகுந்த அரச தனியார் உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ: B/12417 | பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 34 சூரி 10 செவ் 11 இல்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: Software Engineering Degree வங்கியாளர் (அரசவங்கி)<br>எதிர்பார்ப்பு :வங்கி (அரச,தனியார்)<br>தொ.இ:G/12481 |
| பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:32 ½ சூரி 11 செவ் 12 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: MBA சிரேஸ்ர வியாபார மேம்பாட்டு உத்தியோகத்தர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12418 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 49 சூரி 5 செவ் 6 இல் உயரம்: 153 cm<br>தகைமை/தொழில்: உயர்தரம் கணக்காளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: சாதாரணபடித்த ஆண்<br>தொ.இ:G/12482 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்

# ஏல விற்பனை

எமது அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருட்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 18.03.2022 வெள்ளிக்கிழமை காலை 09.30 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்

01. UPS
02. Printer
03. மின்சார உபகரணம்
04. பாவித்த வாகன உதிரிப்பாகங்கள், ரயர்
05. ஏனைய அலுவலக உபகரணங்கள்

இ.வரதீஸ்வரன்
செயலாளர். (C-3974


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் பகுதியில் ஏவுகணை தாக்குதல்

## 23 பேர் பலி



(மொஸ்கோ)
டொனேட்ஸ்க் பகுதியில் உக்ரைன் இராணுவம் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி உள்ளது. இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு உக்ரைனில் உள்ள டொனேட்ஸ்க் பிராந்தியத்தில் ஒரு பகுதி ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த நிலையில் அப்பகுதியில் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளதாக ரஷ்யா தெரிவித்து உள்ளது.

இது குறித்து ரஷ்யா கூறும் போது, "டொனேட்ஸ்க் பகுதியில் உக்ரைன் இராணுவம் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி உள்ளது. இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 23 பேர் உயிரிழந்தனர். 28 பேர் காயமடைந்திருக்கிறார்கள். இந்த ஏவுகணை தாக்குதல் குடியிருப்பு பகுதிகளில் நடத்தப்பட்டு இருக்கிறது.

இது போர் குற்றமாகும்" என்று தெரிவித்துள்ளது. (நி)


### வட கொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தயாராகும் அமெரிக்கா, தென்கொரியா

(பியாங்யாங்)
வடகொரியா விரைவில் மற்றொரு நீண்ட தூர ஏவுகணை சோதனையை நடத்த உள்ளமைக்கான அறிகுறிகள் வெளியாகும் நிலையில் தென் கொரியாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகள், தங்களது பேட்ரியாட் எனப்படும் ஏவுகணை வான் பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்தியுள்ளன.

நீண்ட தூர ஏவுகணை மற்றும் அணுவாயுதச் சோதனைகளுக்கு 2017 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட தடையை மீறவுள்ளதாக வட கொரியா அச்சுறுத்தியுள்ளது. அத்துடன், தனது மிகப்பெரிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வட கொரியா இந்த வாரத்தில் முழு வீச்சில் சோதிக்கலாம் என்ற ஊகங்களுக்கு மத்தியில் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்து வருகிறது.

வடகொரியாவின் ஏவுகணை சோதனைகள் அதிகரித்துள்ளமை அமைதி, பாதுகாப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மற்றும் வட கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என தென்கொரியாவில் உள்ள அமெரிக்கப் படையணி தெரிவித்துள்ளது. (நி)

### மீனவர்கள் வலையில் அரியவகை பலூன் மீன்!



(புதுடில்லி)
ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் மீனவர்கள் வலையில் அரிய வகை பலூன் மீன் சிக்கியது.

கிழக்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் வங்க கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அவர்கள் வலையில் பலூன் மீன் என்றழைக்கப்படும் puffer fish சிக்கியது.

இந்த பலூன் மீன் கொடிய விஷத்தை கக்கும் தன்மை உடையது என மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

### போதைப்பொருள் உற்பத்தியில் ஆப்கானிஸ்தான் முதலிடம்

(காபூல்)
ஆப்கானிஸ்தானில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான சிறார்கள் மற்றும் பெண்கள் உட்பட ஐந்து மில்லியன் பேர் போதைக்கு அடிமையானவர்களாக இருப்பதாக துணைப் பிரதமர் அப்துல் சலாம் ஹனாபி தெரிவித்துள்ளார்.

சர்வதேச மீட்புக் குழு பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே ஹனாபி இதனைத் தெரிவித்துள்ளார்.

உலகில் போதைப்பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஆப்கானிஸ்தான் முலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உக்ரைன் மக்களுக்கு ஆதரவாக நேரலையில் தோன்றிய செய்தியாளர்

## பொலிஸாரால் கைது




(மொஸ்கோ)
ரஷ்யாவில் செய்தி நேரலையின் போது உக்ரைன் மக்களுக்கு ஆதரவு பதாகையுடன் வந்த செய்தியாளரை பொலிஸார் கைது செய்தனர்.

செய்தி நேரலையின் போது திடீரென பெண் செய்தியாளர் ஒருவர் உக்ரைன் மக்களுக்கு ஆதரவான வாசகங்கள் அடங்கிய பதாகையுடன் தோன்றினார்.

உக்ரைன் மீதான போர் ஒரு குற்றம் என்றும், மக்கள் பொய் பிரசாரங்களை நம்ப வேண்டாம், ரஷ்யர்களே போருக்கு எதிராக உள்ளனர் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகையுடன் பெண் செய்தியாளர் தோன்றினார்.

இந்நிலையில் அரசுக்கு எதிராக செயற்பட்டதாக மொஸ்கோ நகர பொலிஸார் செய்தியாளரை கைது செய்தனர். (நி)

# ஒரு புறம் ... உக்ரைன் ... ரஷ்ய...

(கீவ்)
ரஷ்யா-உக்ரைன் ந...
மற்றொரு பக்கம் பே...

உக்ரைன் தலைநகர் கீவ்வை ரஷ்ய இராணுவம் 3 திசைகளில் முற்றுகையிட்டு இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக ரஷ்ய படைகள் கீவ் நகருக்குள் நுழைய தொடங்கி இருக்கின்றன. ரஷ்ய படைகளை எதிர்த்து உக்ரைன் இராணுவம் தீவிரமாக போரிட்டு வருகிறது.

இதன் காரணமாக ரஷ்யா தனது தாக்குதலை தற்போது தீவிரப்படுத்தி உள்ளது. ஏவுகணைகள் மூலம் அதிக தாக்குதல் நடைபெறுகிறது.

உக்ரைனை சில நாட்களுக்குள்

# உக்ரை... கோதுமை... அவதியு...

(ஜெனிவா)
உக்ரைன்-ரஷ்யா போர் காரணமாக சர்வதேச அளவில் ஏழை-எளிய மக்களுக்கு பாதிப்பு ஏற்பட தொடங்கி இருப்பதாக ஐ.நா. சபை எச்சரித்து உள்ளது.

### ரஷ்யாவிடம் இ... உக்ரைனுக்கு நன்...

### பைசர் நிறுவ...

(வோஷிங்டன்)
ரஷ்யாவில் விற்பனையாகும் மருந்துகளின் இலாபத்தை உக்ரைனுக்கு வழங்குவதாக அமெரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# பேச்சுவார்த்தை! மறு புறம் குண்டுமழை!

# னின் சிறிய ஏவுகணை தாக்குதலால்

# ய படைகள் திணறல்

**ன் நாடுகளுக்கு இடையே ஒரு பக்கம் பேச்சு வார்த்தையும், ம் போரும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.**

ரஷ்யா விழுங்கி விடும் என்றுதான் முதலில் உலக நாடுகள் எதிர்பார்த்தன. ஆனால் ரஷ்யாவின் போர் திட்டங்களில் இடையூறு ஏற்பட்டதால் போர் நீண்டுகொண்டே செல்கிறது. ரஷ்ய படைகளுக்கு எதிர்பாராத இடையூறுகள் வந்திருப்பதால் சீனாவிடம் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்ய ரஷ்யா தீவிரமாகி உள்ளது.

உக்ரைன் நாட்டுக்கு சில நாடுகள் மறைமுகமாக பீரங்கிகளையும், ஏவுகணைகளையும் கொடுத்து வருகின்றன. இதுவரை சுமார் 20 ஆயிரம் ஆயுதங்களை உக்ரைன் வெளிநாடுகளில் இருந்து பெற்று எதிர் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

குறிப்பாக சிறிய ரக ஏவுகணைகள் மூலம் ரஷ்ய படைகள் மீது உக்ரைன் தாக்குதல் நடத்துகிறது. இதை ரஷ்ய இராணுவம் எதிர்பார்க்கவில்லை. இந்த சிறிய ரக ஏவுகணைகள் ரஷ்ய படைகளை அதிக அளவு அழித்து உள்ளன. இதனால் ரஷ்யா திணறுகிறது என்பதே உண்மை என்று சர்வதேச போர் நிபுணர்கள் கணித்து உள்ளனர்.

போர் தொடங்கிய போது ரஷ்யா உக்ரைனை விட 5 மடங்கு அதிக பீரங்கிகளையும், 9 மடங்கு அதிக போர் விமானங்களையும் கொண்டிருந்தது. தற்போது இதில் கணிசமான ஆயுதங்களை ரஷ்யா இழந்துள்ளது. அதே சமயத்தில் வெளிநாடுகளிடம் இருந்து விமான எதிர்ப்பு பீரங்கிகளைப் பெற்று உக்ரைன் தன்னை வலுப்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.



இதுவரை ரஷ்யா சுமார் 950 ஏவுகணைகளை உக்ரைனுக்குள் செலுத்தி தாக்குதல் நடத்தி உள்ளது. அவற்றில் இருந்து உக்ரைன் பாடம் கற்றுக்கொண்டு எதிர் தாக்குதல் யுக்தியை மாற்றி இருக்கிறது. இதன் காரணமாக போர் மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று கருதப்படுகிறது. (நி)

# ரைன் போரால்

# மை மா கிடைக்காமல்

# புறும் ஏழை நாடுகள்

உலகின் சூரிய காந்தி எண்ணை தேவையில் 50 சதவீதத்துக்கும் மேல் உக்ரைன் நாடுதான் தருகிறது. அதுபோல உலகின் கோதுமை தேவையில் 30 சதவீதத்தை உக்ரைன் நாடு பூர்த்தி செய்கிறது.

போர்காரணமாக கோதுமை மற்றும் சூரிய காந்தி எண்ணெய் வழங்குவதில் இடையூறு ஏற்பட்டுள்ளது. இதனால் வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள ஏழை மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாவார்கள். ஆபிரிக்க நாடுகளில் 45 நாட்டு ஏழைகள் கோதுமை கிடைக்காமல் அவதிப்படும் என ஐ.நா. சபை சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# இருந்து கிடைக்கும் லாபம்

# ன்கொடையாக வழங்கப்படும்

## வனம் அதிரடி அறிவிப்பு


மருந்து நிறுவனமான பைசர் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில், ரஷ்யாவில் புதிய மருத்துவ சோதனைகளை நடத்[illegible] ல்லை என்றும், [illegible] களுக்கு புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் ரஷ்யாவிற்கு மருந்து வழங்குவதை நிறுத்தப்போவதில்லை என்று தெரிவித்துள்ள அந்நிறுவனம், ஆனால் ரஷ்யாவிடமிருந்து கிடைக்கும் அனைத்து இலாபங்களையும் உக்ரைனுக் [illegible] அளிப்பதாக தெரிவித்துள்ளது. (நி)

# உக்ரைனுக்கு தொடர்ந்தும் அமெரிக்கா ஆதரவளிக்கும்

## ஜோ பிடன் உறுதி



(வோஷிங்டன்)

ரஷ்ய ஆக்கிரமிப்பு படைகளை எதிர்க்க, உக்ரைனுக்கு உதவும் வகையில் ஆயுதங்கள், உணவு மற்றும் பணத்தை தொடர்ந்து வழங்குவோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் உறுதியளித்துள்ளார்.

ரஷ்ய படைகள் தொடர்ந்து தலைநகர் கீவ் மீது உக்கிர தாக்குதலை தொடுத்து வருகின்ற நிலையில், ஜோ பிடனின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக பிடன் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில், உக்ரைனியர்களை திறந்த கரங்களுடன் வரவேற்பதாக பதிவிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு மக்களைப் பற்றி சிந்திக்காது வெளிநாட்டுக்கு வளங்களை விற்கிறது

## கடற்றொழிலாளர் சமாசத் தலைவர்

(கண்டாவளை)

இலங்கை அரசானது மக்களை பற்றி சிறிதும் சிந்திக்காது எமது பிரதேசத்தின் வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பிரான்சிஸ் ஜோசப் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் மன்னார் பூநகரியில் இரண்டு பாரிய அளவிலான மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திட்டத்திற்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு ஒதுக்கீடு செய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசாங்கம் கடந்த வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியது.

இந்த நிலையில் குறித்த இந்திய அதானி குழுமத்துக்கு பூநகரியில் இரண்டு பாரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு கரையோரப் பகுதிகளை வழங்குவது தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இன்று எரிபொருள் இன்மை காரணமாக மட்டுப்படுத்திய தொழிலை எமது தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

குறிப்பாக 40 கடல் மைல்களுக்குச் சென்று தொழில் செய்ய வேண்டிய தொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருள் கிடைப்பதில்லை. ஆனால் குறைந்த அளவு எரிபொருளைக் கொண்டு ஒரு சில தொழிலாளர்கள் மாத்திரமே தற்போது தொழிலுக்குச் சென்று வருகின்றனர். ஏனைய மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில்லை.

இந்த அரசு எதை செய்தாலும் மக்கள் பற்றி சிந்திப்பதில்லை. அதாவது பூநகரி பிரதேசத்தில் இந்த காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு தொடர்ந்து நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற போதும் இதுவரை மக்கள் பற்றி சிந்திக்காத அரசாங்கம் இப்போது இவ்வாறு இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட்டதாக ஊடகங்கள் வாயிலாக தெரியவந்துள்ளது.

இத்திட்டத்தினால் எதிர்காலத்தில் கடற்றொழில் பாதிக்கப்படும். அதேபோல கால்நடை வளர்ப்பு பாதிக்கப்படும். அவ்வாறு இந்த பிரதேசத்தில் அனைத்து மக்களின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்படும். இந்த மக்களைப் பற்றி சிந்திக்காத அரசாக இந்த அரசு உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-315)



கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. குறித்த கட்டடத்தினை வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன்பந்துலசேன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பாடசாலை கட்டடத் தொகுதியை திறந்து வைத்தார். பாடசாலை முதல்வர் பெருமாள் கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் மற்றும் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் இ.கமலராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:- யதுபாஸ்கரன்)

## 'உள்ளம்' சஞ்சிகை அறிமுக நிகழ்வு

விசுவமடு மத்திய சனசமூக நிலையமும் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் இணைந்து நடத்தும் "உள்ளம்" சஞ்சிகை அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் விசுவமடு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விசுவமடு மத்திய நூலக வாசகர் வட்ட உறுப்பினரும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவனுமான சர்வேஸ்வரன் வில்லரசன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (5-4)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவ கலந்துரையாடல்


(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருத்தல யாத்திரை தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

பாலைதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் பெருமளவான யாத்திரிகர்கள் கலந்து கொள்வதனால் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், குடிநீர் வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதிகள் ஏற்படுத்துதல் தொடர்பில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கடற்படையினர், கிளிநொச்சி மறைக் கோட்ட குருமுதல்வர் மற்றும் பிரதேச சபையின் செயலாளர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் துறைசார் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர். (5-4-315-316)

# கசிப்பு உற்பத்தி செய்யப்பட்ட இடம் பொலிஸாரால் முற்றுகை



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்று காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்து வந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையால் இக்கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்றது. கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய பொருட்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைகளின் பின் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுராங்க தெரிவித்துள்ளார். (5-4-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 160-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| தக்காளி | 200 | 200 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 |
| கோவா | 100 | 110 | 100 | 120 |
| கரட் | 200 | 300 | 280 | 350 |
| பூசணி | 100 | 100 | 120 | 120 |
| புடோல் | 180 | 160 | 180 | 150 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 180 | 280 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140-170 | 200 |
| பாகற்காய் | 350 | .350 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 180 | 150 | 140 | 180 |
| கறிமிளகாய் | 250 | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 1300 | 1000 | 1000 | 1400 |
| போஞ்சி | 250 | 230 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | — | 220 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 60 | 80 |
| தேசிக்காய் | 140 | 120 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 150 | 170 | 160 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 180 | 350 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 15 | 30 | 30 |
| ஈரப்பலா | - | 120 | 80 | - |

# ஸார்ப் நிறுவனத்தால் கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்ந்து முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பணியை முன்னெடுத்து வரும் ஸார்ப் நிறுவனத்தினால் இதுவரை 19 இலட்சத்து 78 ஆயிரத்து 665 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 32 ஆயிரத்து 792 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியதாக ஸார்ப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஸார்ப் நிறுவனம் கடந்த 13 ஆம் திகதி வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது

அவ்வறிக்கையில் இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2022 மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழுள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழுள்ள சுதந்திரபுரம் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழுள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 19 இலட்சத்து 78 ஆயிரத்து 665 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 32 ஆயிரத்து 792 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழுள்ள சுதந்திரபுரம் பகுதியிலும் அம்பகாமம் பகுதியிலும் துரிதகதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-316)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி கல்மடுநகர் திருவருள்மிகு சம்புக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பால சஜீவ குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பாக இடம் பெறும். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2022-13.04.2022



தன்னம்பிக்கையோடு செயற் பட்டு தடைகளை அகற்றும் மேஷ இராசி வாசகர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் உச்சம் பெற்றிருக்கிறார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வருமானம் திருப்தி தரும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். வலிமை இழக்கும் புதனால், உங்களுக்கு நல்ல பலன்கள் அதிகம் வந்து சேரும். காரணம் உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப, உத்தியோகத்தில் உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும்.

**ராகு-கேது சஞ்சாரம்**

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசியான உங்கள் இராசிக்கு ராகு பகவான் வருகிறார். சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போகிறார். எனவே குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதி காண இயலும். பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைப்பது அரிது. வாழ்க்கைத் துணையின் உடல் நலத்திற்காக செலவிடும் சூழ்நிலை உண்டு. 'பழைய வேலைக்கே செல்லலாமா?' என்ற சிந்தனை தோன்றும். யோசித்து செயற்பட வேண்டிய நேரம் இது.

**மேஷ - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானம் மற்றும் எதிரிகள் ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்குபவர், புதன். இவர் பங்குனி 22 ஆம் திகதி முதல் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். எனவே

செலவிற்கேற்ற வரவு வந்துசேரும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்பு அதிகரிக்கும். யாரையும் நம்பி எதையும் செய்ய இயலாது. இந்த காலகட்டத்தில் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் கைவிடாதிருங்கள். ஜீரணத் தொல்லை ஏற்படும். மாற்று இனத்தவர்கள் மூலம் ஒரு சில காரியங்கள் முடிவடையும்.




**கும்ப - செவ்வாய் சஞ்சாரம்**

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதுவரை உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்றிருந்தாலும் சனியோடு சேர்ந்து சஞ்சரித்ததால், உத்தியோகத்தில் ஒரு சில போராட்டங்களைச் சந்தித்திருப்பீர்கள். அந்த நிலை இப்போது மாறும். எதிர்பார்த்த மாறுதல்கள் கிடைக்கலாம். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். அதே நேரம் செவ்வாய், உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியாக இருப்பதால், நல்ல வாய்ப்பாக வந்தாலும் அதை உபயோகப்படுத்த இயலுமா என்பது சந்தேகம்தான். இம்மாத தொடக்கத்தில் செவ்வாய் உச்சம் பெறுவதால் அபிராமி அம்மன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படும். புதிய முயற்சி கைகூடுவதில் தாமதம் உருவாகும். கணவன் - மனைவிக்குள் தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்பட்டு மன அமைதி குறையலாம். வளைந்து கொடுத்துச் செல்வது நல்லது.

## தொழில் வளம் சிறப்பாக இருக்கும்

கும்பச் செவ்வாயின் சஞ்சார காலத்தில் இடம், பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு நீண்ட நாட்களாக இருந்து வந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



அனுபவ அறிவின் மூலம் அகிலத்தை வசப்படுத்தும் ரிஷப இராசி வாசகர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, 9 ஆம் இடத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். அவரோடு செவ்வாய், சனி சேர்க்கை பெற்றிருக்கின்றன. எனவே இடம், பூமியால் ஆதாயமும், எதிர்பார்த்த காரியங்களை எளிதில் நிறைவேற்றும் சூழ்நிலையும் அமையும்.

**மீன-புதன் சஞ்சாரம்**

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். தன -பஞ்சமாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். மனக்கசப்பு தரும் தகவல்கள் வரலாம். 'ஊர் மாற்றமோ, உத்தியோக மாற்றமோ உடனடியாகச் செய்ய வேண்டும்' என்ற எண்ணம் தோன்றும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. குடும்பத்தில் மருத்துவச் செலவு அதிகரிக்கும். 'எதையும் திட்டமிட்டுச் செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள்.

**ராகு-கேது சஞ்சாரம்**

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகு செல்கிறார். இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்த அவர், இப்பொழுது விலகுவது நன்மைதான். அதேநேரம் கேது பகவான் 6 ஆம் இடத்திற்கு வருகிறார். இதனால் எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். எளிதாக முடிய வேண்டிய பிரச்சினை, கொஞ்சம் இழுபறிக்குப் பிறகே முடிவுக்கு வரும். தூரதேசம் செல்லும் வாய்ப்பு கைநழுவிப் போகலாம். உறவினர் பகை உருவாகாமல் பார்த்... சுமை குறை...

யால் வரவு உண்டு.

**மேஷ - புதன் சஞ்சாரம்**

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், இப்பொழுது




விரய ஸ்தானத்திற்கு வருகிறார். எனவே விரயங்கள் கூடும். வீடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் தானாக வந்து சேரும். தாமதப்பட்டு வந்த பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். அதை விற்றுத் தொழிலுக்கான மூலதனத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும்.

**கும்ப - செவ்வாய் சஞ்சாரம்**

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் உச்சம் பெற்றிருந்த செவ்வாய், தொழில் ஸ்தானத்திற்கு செல்வது நன்மைதான். சுயதொழில் தொடங்கும் வாய்ப்பு கைகூடும். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் தொழில் கூட்டாளிகளாக சம்மதிப்பர். என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கிப் போட்ட இடம், இப்பொழுது அதிக விலைக்கு விற்று இலாபத்தைக் கொடுக்கும். இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ராகு - கேது பெயர்ச்சி வரை பொறுமையாக இருப்பது நல்லது. அதன்பிறகு பொருளாதாரத்தில் உள்ள பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். பிள்ளைகளால் பெருமை உண்டு. வீடு, இடம் வாங்கும் யோகம் வாய்க்கும். பணிபுரியும் பெண்களுக்கு நினைத்த இடத்திற்கு மாறுதல்கள் கிடைக்கும். கேட்ட சலுகைகளையும் மேலதிகாரிகள் வழங்குவர்.

## எதிர்பார்த்த காரியங்களை எளிதில் நிறைவேற்றும் சூழ்நிலையும் அமையும்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### மூன்று மோதிரங்கள்



(நேற்றைய தொடர்ச்சி)

கேசவனை அந்நாட்டு மன்னனாக்கிப் பட்டாபி ஷேகமும் லதாங்கியின் தந்தை நடத்தினான். கேசவனும் மாதவனைத் தன் மந்திரியாகவும் கோவிந்தனைத் தன் சேனாதிபதியாகவும் ஆக்கிக் கொண்டு நாட்டை நன்கு ஆண்டு வரலானான்.

வேதாளம் இக்கதையைக் கூறி "மன்னனே! லதாங்கி மூவரில் ஏன் கேசவனைத் தன் கணவனாகத் தேர்ந்தெடுத்தாள்? அரச குமாரர்களையெல்லாம் வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிய லதாங்கி முடிவில் ஒரு சாதாரண ரஜபுத்திரனைத் தான் மணந்து கொண்டாள். அவனுக்கு மட்டும் நாடாளும் ஆசை இல்லை என்றதற்கு என்ன ஆதாரம்? மேலும் மூவரில் ஒருவரைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால் செயலாக்கும் சக்தியைத் தரும் நீலக்கல் மோதிரம் அணிந்த கோவிந்தனைத் தேர்ந்தெடுத்திருக்கலாமே. அப்படிச் செய்யாமல் பச்சைக்கல் மோதிரம் அணிந்த கேசவனைத் தானே தேரந்தெடுத்தாள்? இது ஏன்? என் இந்த சந்தேகங்களுக்குச் சரியான பதில்களைக் கூறாவிட்டால் உன் தலை வெடித்து சுக்கு நூறாகி விடும்" என்றது.

விக்ரமனும் "சாது அரிய சக்தி வாய்ந்த மோதிரங்களைக் கொடுத்ததும் மூவரும் முதலில் நினைத்தது மக்களின் நன்மையை நாடும் தம் மன்னனிடம் அவற்றைக் கொடுத்துவிட வேண்டும் என்பதுதான். இது அவர்களுக்கு சுயநலம் இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது. பணத் தாசையோ நாடாளும் ஆசையோ இல்லை என்பதையும் தெரிவிக்கிறது. இதை லதாங்கி எளிதில் அறிந்து விட்டாள். அடுத்து மூன்று மோதிரங்களுக்கும் தொடர்பு உள்ளது என்பது, ஒன்று யோசனை சொல்ல, மற்றது அதற்கு வழி காட்ட, மூன்றாவது அதனைச் செயற்படுத்தி அந்த யோசனையை ஆக்கபூர்வமாக்குகிறது. இவற்றில் அடிப்படையானது பச்சை மோதிரமே. அது யோசனை சொன்னாலே மற்ற இரண்டும் செயற்படும். பச்சை மோதிரமே இல்லாமல் மற்ற இரு மோதிரங்களில் எது இருந்தாலும் பயனில்லை. எனவே பச்சை மோதிரம் அணிந்த கேசவனை லதாங்கி தன் கணவனாகத் தேர்ந்தெடுத்தாள். இது முற்றிலும் சரியே. இதை நன்கு உணர்ந்த கேசவன் தன் யோசனைகளை நடைமுறையில் கொண்டு வர வழி சொல்ல மாதவனையும் அவற்றை செயலில் செய்து முடிக்கும் சக்தி பெற்ற கோவிந்தனையும் முறையே அமைச்சனாகவும் சேனாதிபதியாகவும் நியமித்துக் கொண்டான். எனவே எல்லாம் சரியாகத்தான் நடந்திருக்கிறது" என்றான்.

விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே, அவன் சுமந்து வந்த உடலோடு வேதாளம் உயரக் கிளம்பிப் போய் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




"அரசன் மாள, மற்றொருவன் நாடாள முடியும்; அவன் உயிரோடு இருக்க இராமன் ஆட்சிக்கு வருதல் முறையாகாது; மூத்தவன் தசரதன் இருக்கும்போது முன்னவன் என்று கூறிக் கொண்டு இவன் முடி ஏந்துவது தவறு அல்லவா?"

"காலம் கருதித் தக்கது செய்தால், ஞாலமும் கைகூடும்; இதை நன்கு பயன்படுத்திக் கொண்டவள் கோசலை; அரசனை அவள் மயக்கிவிட்டாள்; அவனை முடுக்கி விட்டிருக்கிறாள்; இல்லாவிட்டால் திடீர் என்று ஏன் அவன் இந்த முடிவுக்கு அடி வைக்க வேண்டும்? நான் படித்துச் சொல்கிறேன்; நீ மனம் இடிந்து அழியப் போகிறாய்."

"நாளைக்கு இராமன் ஆட்சிக்கு வருகிறான்; நடக்கப் போகும் காட்சி என்ன?"

"பெட்டிச் சாவி கோசலை கையில்; அவள் கெட்டிக்காரியாகிறாள்; நீ கைகட்டிக் கொண்டு நிற்பாய்"

"வறியவர் வந்து வாய் திறந்து கேட்டால் சிறியவள் நீ என்ன செய்வாய்? மூத்தவளைக் கேட்க அவள் தந்தால் நீ உன் மானத்தைக் காத்துக் கொள்ள முடியும்; ஆட்சி அவள் கையில்; அடிமைத் தளை உன் தாளில்; வள்ளலாக வாழ வேண்டிய நீ, எள்ளல் நிலையில் தாழப் போகிறாய் ஏழ்மை உனக்கு; மேன்மை அவளுக்கு". "எந்த வகையில் மூத்தவளுக்கு நீ தாழ்ந்து விட்டாய், மூவரில் நீ பேரழகி, அரசன் ஆசைக்கிழத்தி, இப்பொழுது அனைத்தையும் இழத்தி".

"கெஞ்சுவது உன்னிடம்; அவன் அஞ்சுவது கோசலைக்கு; மஞ்சம் உனக்கு தஞ்சம் அவளுக்கு. இது வஞ்சம் என்று நினைக்கிறது என் நெஞ்சம்" என்றாள்.

"மானே தேனே, என்று தெவிட்டாமல் பேசுவான்; பழகியதால் பால் புளித்ததோ! "கட்டிக் கரும்பே" என்று பேசியவனுக்கு நீ எட்டிக்காய் ஆகிவிட்டாயோ? பித்தம் பிடித்தவள்போல் நீ பிதற்றாமல் இருக்கிறாய்; சித்தம் அடங்கி, நித்தம் அவனோடு குலவப் போகிறாயா?". பூ உனக்கு எதற்கு? அதைப் பிய்த்துப் போடு; திலகம் ஏன்? அதனைக் கலைத்துக் கலகம் செய்; சடை; அது உனக்குத் தடை; அதை விரித்துவிடு; சிரிப்பான் அவன் முன் சீர்குலைந்து நில்; பட்டுப் புடைவை ஏன்? பகட்டை விடு; காசுக்கு உதவாதவர் கலகலப்புக் காட்டுகிறார்கள்.

சுகாசினியாக இருக்க வேண்டிய நீ, விகாசினியாய் இருக்கிறாய். அந்தப்புரத்து அழகி உன்னை எந்தப் புறமும் வளராமல் தடுத்து விட்டான்; இட்ட மகிஷி என்றால் பட்ட மகிஷியாக ஏன் ஆகக் கூடாது?".

"கொஞ்சிக் குலவ உன்னை வஞ்சிக் கொடி என்றான்; நீ வஞ்சித்து அவனுக்கு அது உண்மை என்பதைக் காட்டு".

"அழகி என்கிறான்; மனம் இளகிவிட்டாய்; இளையவள் என்றான்; வளைந்து கொடுத்தாய்; தாய்மை என்றால் அது அவனுக்குச் சேய்மையாகி விட்டது. நீ பரதன் தாய் என்பதை அவன் தட்டிக்கழித்து விட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதர்மத்தை முயல்கிறவனுக்கு நற்குணம் நாசமடைகிறது. பாவங்களைச் செய்கிறவனுக்கு அவனை ஒத்த பாவிகள் நேசர்களாவார்.
*– வாரியார்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குமாரசாமிக் குருக்கள் நடத்திய பரீட்சை போல...

இது நாற்பது வருடத்துக்கு முற்பட்ட கதை. நாங்கள் சிறுவர்களாகப் பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த காலம்.

ஊர்க்கோயில்களில் கொடியேற்றுவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து அந்தணச் சிவாச்சாரியர்கள் வருவார்கள்.

அவர்களின் நடை, உடை, பாவனையில் குறித்த சிவாச்சாரியர் பற்றிய மனப்பதிவுகள் அமையும்.

அந்தவகையில் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் எங்கள் ஊருக்கு வந்திருந்தார்.

அது ஓர் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு. அதனையொட்டி சைவ சமய அறிவுப்போட்டி நடத்தப்பட்டது.

அதில் ஒரு கேள்வி. பிள்ளைக்கறி சமைத்து அமுது கொடுத்தவரின் பெயர்?

இந்தக் கேள்விக்கு சிறுத்தொண்டர் நாயனார் என்று யாம் விடையளித்தோம். எனினும் அந்தப் பதிலுக்கு பிழையிடப்பட்டது.

எதற்காக அப்படி என்பதை அறியும் பொருட்டு யாம் படித்த திருமுருக கிருபானந்த வாரியாரின் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு குறித்த ஆலயத்துக்குச் சென்று பரிபாலன சபையிடம் வினவினோம்.

அவர்கள், கேள்விகள் அனைத்தையும் தயாரித்ததும் அதனைத் திருத்தியதும் சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் என்றும் அவரிடமே அது பற்றிக் கேட்க வேண்டும் என்றும் கூறினர்.

குருக்கள் எம்மைச் சந்திப்பாரா? அவரிடம் எமது பதில் ஏன் பிழை என்று கேட்கலாமா? என்ற தயக்கம் இருந்தாலும் கிருபானந்த வாரியாரின் புத்தகம் ஆதாரமாக இருக்கின்ற துணிவில் குருக்களைச் சந்தித்து ஐயா! சிறுத்தொண்டர் என்ற பதிலுக்கு எதற்காகப் பிழையிடப்பட்டது என்று கேட்டோம்.

அதற்கு குமாரசாமிக் குருக்கள் பரஞ்சோதியார் என்ற பதிலுக்குத்தான் சரியிடப்பட்டது என்றார்.

ஐயா! பிள்ளைக்கறி சமைத்து அமுது கொடுத்தவர் என்று வினா அமைவதால் அவரின் இயற்பெயரைவிட சிறுத்தொண்டர் நாயனார் என்ற பதிலே பொருத்தமாக இருக்கும் என்றோம்.

அவையெல்லாம் இங்கு கவனிக்கப்படமாட்டாது. பரஞ்சோதியார் என்று பதில் எழுதியிருந்தால் மட்டுமே சரியிடப்படும் என்று கூறினார் குமாரசாமிக் குருக்கள்.

இந்தக் கதையை நாம் கூறும்போது, அது சரி எதற்காக? இப்போது இது என்று நீங்கள் கேட்கலாம். நடந்து முடிந்த 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையைப் பார்த்தபோது, குமாரசாமிக் குருக்களின் ஞாபகம்தான் வந்தது.

அதாவது குமாரசாமிக் குருக்கள் போன்ற ஒருவர்தான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான வினாக்களை எடுத்து அதற்குரிய விடைகளைக் கொடுத்திருப்பார் என்று எண்ணத் தோன்றியது.

என்ன செய்வது, கொடிய கொரோனாக் காலத்திலும் இப்படியொரு வன்மத்தனம் தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சையில் காட்டப்பட்டது.

ஆம், சரியான விடைக்கு அங்கு இடமில்லை. சரியான விடை என்று வினாத்தாள் தயாரித்தவர் நினைத்த விடையே சரியாம். இதனால் அந்தப் பிஞ்சுகள் ஏமாந்து போயினர்.

ஏதோ! நெருப்பாற்றைக் கடந்தாயிற்று. அந்த நெருப்பு சிறார்களின் பூப்போன்ற மனங்களை வாட்டிவிட்டதுதான் வேதனையிலும் வேதனை.

## மட்டக்களப்பு ஈரக்குளம் வயல் பகுதியில் காவலுக்குச் சென்ற விவசாயி வெட்டிப் படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஈரக்குளம் வயல்பகுதியில் கொட்டகை ஒன்றில்வேளாண்மையை காவல் காத்துவந்த விவசாயி ஒருவர் வெட்டுகாயங்களுடன் உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

ஈரக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயியான 54 வயதுடைய பரசுராமன் ஆறுமுகம் என்றவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வயல் பகுதியில் உள்ள வேளாண்மை செய்கையை காட்டு மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக ஞாயிற்றுக் கிழமை இரவு வீட்டில் இருந்து வயல்பகுதியில் அமைந்துள்ள கொட்டகைக்கு சென்ற நிலையில் திங்கட்கிழமை வீடு திரும்பாததால் அவரை தேடியபோது கொட்டகையில் வெட்டு காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸ் தடயவியல் பிரிவு அழைக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## கோவிட் தொற்றால் 8 பேர் உயிரிழப்பு

நாட்டில் மேலும் 8 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,415 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## நாட்டில் இன்றைய தினமும் மின்வெட்டு அமுலாகும்

நாட்டில் இன்றும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏ, பி, சி, டி, ஈ, எஃப், ஜி, எச், ஐ, ஜே, கே மற்றும் எல் ஆகிய வலயங்களில் 3 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை இரண்டு மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரை ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்கள் வரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

மேலும் பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி மற்றும் டபிள்யூ ஆகிய வலயங்களில் நான்கு மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும். காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை மூன்று மணி நேரம் மின்வெட்டும் மற்றும், மாலை 5.30 மணிமுதல் இரவு 10.45 மணிவரை ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் விக்கிரமாராச்சி பிறை வேற்லிமிற்ரட், ஈவினை, கற்பகம், ஊரெழு, குரும்பசிட்டி, என்.கே திருமண மண்டபம்- ஊரெழுபிள்ளையார்,புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, வாகையடி, டெலிகாம் சுன்னாகம், சூறாவத்தை சுன்னாகம், புகையிரத நிலைய வீதி, மணியம்கடையடி, அச்சுவேலி தொழிற்பேட்டை I,II& III, சென்றாமெஸ் தொழிற்சாலை, அச்சுவேலி, வளலாய், இடைக்காடு, கதிரிப்பாய், தோப்பு,தம்பாலை, நவக்கிரி,குட்டியப்புலம், சுதந்திரபுரம், நிலாவரை, ஆவரங்கால், புத்தூர், மட்டுவில், நாவற்காடு-அச்சுவேலி, பெரியபொக்கணை, ஊறணி, வாதரவத்தை, வீரவாணி, இரும்புமதவடி, சக்கலாவத்தை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குளோப் அரிசி ஆலை, குட்சட்வீதி, பண்டாரிக்குளம், தவசிக்குளம், தோணிக்கல், நீர்வழங்கல்( மதவுவைத்தகுளம்) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## நூல் வெளியீடும் மதிப்பளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் சங்கப் பேழை நூல் வெளியீடு, உலகத் தாய் மொழி நாள் பேருரை மற்றும் 2019 உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் அதி விசேட சித்தி பெற்ற வட மாகாண மாணவர்களுக்கான மதிப்பளிப்பு ஆகிய நிகழ்வுகள் எதிர்வரும் 19.03.2022 சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குண ராஜா கலந்துகொள்வார். (5,4)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

*நரேந்திரர் பாடிய பாடல் இது*

சிந்தனை செய்மனமே ஸ்ரீஹரியைத் தினமே- சிந்தனை, சந்ததம் அடியவர் சிந்தனையில் இனிக்கும் தத்துவ மூர்த்தியை வித்தகனை- சிந்தனை,ஆயிரம் ஆயிரம் நிலவினை மிஞ்சும் அருட்சுடர் பொங்கும் பரம்பொருளை மாய விநோதனைத் துயமா மணியை மனம்கவர் மோகன பேருருவை-சிந்தனை,அறிவினை, நிகரிலா ஜோதியை,புதிய அன்பிலே மின்னெழில் பூத்தவனை, இறைவனை, இன்பமாம் கடலிலே மூழ்கிஇருவிழி நீராறாகப் புளகிதமாய்- சிந்தனை.

இந்த வரிகளை நரேந்திரர் பாடியபோது குருதேவரின் திருமேனி ஒருமுறை நடுங்கியது: மயிர் சிலிர்த்தது; கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது. இடையிடையே அவர் எதையோ பார்த்து ஆனந்தப் புன்னகை புரிந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 20

இலங்கையின் பொருளாதார உற்பத்தியில் 2015 ஆம் ஆண்டில் 10% பங்கைக் கொண்டுள்ள இந்த மாகாணம் சேவைத் துறையில் 11% ஐயும் கைத்தொழில் துறையில் 8% ஐயும் விவசாயத் துறையில் 14% ஐயும் பங்களிப்புச் செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (42%) அதைத்தொடர்ந்து விவசாயத் துறையில் (37%) மற்றும் கைத்தொழிற்றுறையில் (21%) ஆகும்.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம் சனத்தொகையின் விஞ்ஞான ரீதியான பிரிவுகளான நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள் தொடர்பாக மத்திய மாகாணத்திற்கும் அதன் மாவட்டங்களுக்கும் ஏற்புடைய தகவல்கள் அடுத்துவரும் பகுதிகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### மத்திய மாகாணத்தின் மொத்த சனத்தொகை, சன அடர்த்தி மற்றும் எழுத்தறிவு-2012

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) படி நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.6% இற்கு சமனான 2,571,557 பேர் இந்த மாகாணத்தில் வசிக்கின்றனர். மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 53.5% அதாவது 1,375,382 பேர் கண்டி மாவட்டத்திலும் 18.8% அதாவது 484,531 பேர் மாத்தளை மாவட்டத்திலும் 27.7% அதாவது 711,644 பேர் நுவரெலியா மாவட்டத்திலும் வசிக்கின்றனர்.

மாகாணத்தில் சனத்தொகை அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 461 பேர் ஆகும். 2012 ஆம் ஆண்டில் 10 வயதுக்கு மேற்பட்ட சனத் தொகையினது எழுத்தறிவு 93.3% ஆகும்.

**சனத்தொகை கணக்கெடுப்பின் (2012) படி நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.6% இற்கு சமனான 2,571,557 பேர் இந்த மாகாணத்தில் வசிக்கின்றனர். மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 53.5% கண்டி மாவட்டத்திலும் 18.8% மாத்தளை மாவட்டத்திலும் 27.7% நுவரெலியா மாவட்டத்திலும் வசிக்கின்றனர். மாகாணத்தில் சனத் தொகை அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 461 பேர் ஆகும்.**

### மத்திய மாகாணத்தின் பால்நிலை வேறுபாட்டுக்கு அமைய சனத்தொகை மாற்றம்-2012

மாகாணத்தினதும் மாவட்டங்களின்தும் நாட்டினதும் சனத்தொகையில் பால்நிலை ரீதியாக மாறுபட்டுள்ள விதம் அட்டவணை (d1)இல் காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய மாகாணங்களைப் போன்று இந்த மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் பெண்கள் ஆண்களை விஞ்சியிருப்பதை இங்கு அவதானிக்கலாம்.

அட்டவணை (d1)- பால்நிலை அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு சதவீதம் - மத்திய மாகாணம்

| மாவட்டம் | மொத்த சனத்தொகை | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கண்டி | 1,375,382 | 655,791 | 47.7 | 791,591 | 52.3 |
| மாத்தளை | 484,531 | 233,657 | 48.2 | 250,874 | 51.8 |
| நுவரெலியா | 711,644 | 340,347 | 47.8 | 371,297 | 52.2 |
| மத்திய மாகாணம் | 2,571,557 | 1,229,795 | 47.8 | 1,341,762 | 52.2 |

### மத்திய மாகாணத்தின் சனத்தொகை பிரிவு அடிப்படையில் மாறுபட்டுள்ள விதம் -2012

மாகாணத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை மக்கள் கிராமப் புறங்களிலேயே வாழ்கின்றனர். தேயிலைப் பயிர்ச்செய்கை பரந்து வியாபித்துள்ள காரணத்தினால் ஒப்பீட்டளவில் மத்திய மாகாணத்தில் பெருந்தோட்ட மக்கள் சனத்தொகை உயர் மட்டத்தில் (18.9%) காணப்படுகின்றது. நாட்டின் மொத்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 53.8% மக்கள் மத்திய மாகாணத்தில் வசிக்கின்றனர். பிரிவுகளுக்கு அமைய சனத்தொகை மாறுபட்டுள்ள விதம் அட்டவணை (d2) இல் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய தமிழர்களில் 57.9% மத்திய மாகாணத்தில் வசிக்கின்றனர். மாகாணத்தின் சனத்தொகை இன ரீதியாக மாறுபட்டுள்ள விதத்தை ஒப்பீட்டு ரீதியாக நோக்கும் வகையில் அட்டவணை (d3) இல் தரப்பட்டுள்ளது.

### மத்திய மாகாணத்தின் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு - 2012

மத்திய மாகாணத்தில் பெரும்பான்மை மதத்தினர் (65.0%) பௌத்தர்கள் ஆவர். அதற்கடுத்தாக இந்துக்கள் (21%) இஸ்லாமியர்கள் (10.3%) மற்றும் உரோமன் கத்தோலிக்கர்கள் மற்றும் ஏனைய மதத்தினர் (3.7%) உள்ளனர்.

இலங்கையில் உள்ள இந்து பக்தர்களில் 21% மத்திய மாகாணத்தில் வசிக்கின்றனர்.

அவ்வாறே பௌத்தர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் முறையே 11.7% மற்றும் 13.4% உள்ளனர். மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை (d4) இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை (d2): பிரிவுகளுக்கு அமைய சனத்தொகை வேறுபாடு - மத்திய மாகாணம்

| மாவட்டம் | மொத்த சனத்தொகை | நகர | | கிராமிய | | தோட்ட | |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| கண்டி | 1,375,382 | 170,544 | 12.4 | 1,119,221 | 81.4 | 85,617 | 6.2 |
| மாத்தளை | 484,531 | 60,276 | 12.4 | 405,176 | 83.6 | 19,079 | 3.9 |
| நுவரெலியா | 711,644 | 40,151 | 5.6 | 290,913 | 40.9 | 380,580 | 53.5 |
| மத்திய மாகாணம் | 2,571,557 | 270,971 | 10.5 | 1,815,310 | 70.6 | 485,276 | 18.9 |

### மத்திய மாகாணத்தின் இன ரீதியாக சனத்தொகை மாறுபட்டுள்ள விதம் -2012

மத்திய மாகாணத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் (66.0%) சிங்களவர்கள் ஆவர். இரண்டாவதாக இந்தியத் தமிழர்கள் (18.9%) உள்ளனர். அடுத்ததாக இலங்கை முஸ்லிம்கள் (9.9%) உள்ளனர்.

இலங்க்க தமிழர்கள் (4.9%) மற்றும் பறங்கியர், மலாயர் மற்றும் இந்திய செட்டியார்கள் என ஏனைய இனத்தவர்கள் (0.3%) காணப்படுகின்றனர்.

அட்டவணை (d3): இன அடிப்படையில் சனத்தொகை மாறுபட்டுள்ள வீதம்

மத்திய மாகாணம்

| மாவட்டம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | வேறு |
|---|---|---|---|---|---|
| கண்டி | 74.4 | 5.0 | 6.2 | 13.9 | 0.4 |
| மாத்தளை | 80.8 | 5.0 | 4.8 | 9.2 | 0.2 |
| நுவரெலியா | 39.6 | 4.6 | 53.1 | 2.5 | 0.2 |
| மத்திய மாகாணம் | 66.0 | 4.9 | 18.9 | 9.9 | 0.3 |
| இலங்கை | 74.3 | 11.1 | 4.1 | 9.3 | 0.5 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி - கூட்ட...

லகத்தில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை திடீரெனப் பிற்போடப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறும் என ஜனாதிபதி செயலகத்தால், கூட்டமைப்பின் தலைமைக்கு நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் நேற்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி செயலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அணி திரண்டனர்.

இந்நிலையிலேயே, சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலகத்தால் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார். (ம)

## மதுபானங்களின்...

வனம் தெரிவித்துள்ளது.

அவ்வாறே, அதிவிஷேசம் வகை மதுபானம் 375 மில்லிலீற்றரின் விலை 60 ரூபாயினாலும் 180 மில்லிலீற்றரின் விலை 30 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து வகையான பியர்களின் விலைகளும் 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மருந்துப் பொருட்...

விலையினை 29 சதவீதத்தால் உயர்த்துவதற்கு ஔடத விலை கட்டுப்பாட்டு சபை கடந்த வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியிருந்தது.

அதற்கமைய, மருந்து வகைகளின் விலைத்திருத்தம் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ம)

## அலைகடலென...

நாட்டின் பல பகுதிகளிலிருந்து படையெடுத்த மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் கொழும்பில் பாரிய மக்கள் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.


"முழு நாடும் அழிவில்: நாட்டைக் காப்போம்" என்ற தொனிப்பொருளில் அரசாங்கத்திற்கு எதிராக இந்த பேராட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதற்காக நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வருகை தந்த பெருந்திரளான மக்கள் அரசாங்கத்தின் மீதான தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்கென நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் 10 வெவ்வேறு பேரணிகளாக கொழும்பிற்கு வருகைதந்த மக்கள், எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகம் மற்றும் பி.டி.சிறிசேன மைதானம் ஆகிய இரு இடங்களில் ஒன்றுகூடி, பின்னர் அங்கிருந்து காலிமுகத்திடலை நோக்கிச்சென்று ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக ஒன்று திரண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக கூடிய மக்கள் அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கும் வகையிலான வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (ம)

# GO HOME GOTA
## டுவிட்டரில் ட்ரெண்டிங்




(கொழும்பு)

#GoHomeGota2022 மற்றும் #GoHomeGota என்ற ஹாஷ்டாக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இலங்கையில் டுவிட்டரில் ட்ரெண்டிங்கில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இதனை அடுத்து #WeAreWithGota என்ற எதிர் டுவிட்டர் ஹாஷ்டாக்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்தும் சிலர் பகிர்ந்து வருகின்றனர்.

நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், பல அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் முக்கிய ஆதரவாளர்கள் இதனை பயன்படுத்தி ஆதரவு தெரிவித்து வருகின்றனர். (ம)

## அரசியல் கட்சி...

தற்போதைய பொருளாதாரச் சூழலைத் தீர்ப்பதில் அரசியல் கட்சிகளுக்கு இடையே உடன்பாடுஏற்படவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் ஒரு பில்லியன் கடனை திரும்பச் செலுத்த வேண்டிய நிலையில் தற்போது 600 மில்லியன் மட்டுமே கையிருப்பு உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் மொத்தக் கடன் 19 ஆயிரம் பில்லியன் என்றும் இந்தக் கடன்களைத் தீர்க்க வெளிநாட்டு நாணயத்தை நாம் கடனாகப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. உர உற்பத்தியில் ரஷ்யா முன்னணியில் உள்ளபோதும் அங்கிருந்து வாங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தற்போது காணப்படும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படாவிடின் இலங்கை கிரீஸ் நாட்டைப்போன்ற நிலைக்குத் தள்ளப்படும் என ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார். (ம)

## அரசை வீட்டுக்கு...

ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் இறுதியில் உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், உங்களால் முடியாதென்றால் நாட்டை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள். நாங்கள் செய்து காட்டுகின்றோம். மக்கள் பல்வேறுவழிகளில் அவதியுறுகின்றனர். அவர்களுக்கு தீர்வு வழங்க அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை. தேசிய அரசாங்கம் ஒன்றில் இணையும் எண்ணம் தமக்கு இல்லை. அமைச்சுக்களின் எண்ணிக்கை, கட்சி உறுப்பினர் களுக்கான பதவிகள்என்று பல ஒப்பந்தங்களை செய்து அரசாங்கத்துடன் இணைகின்ற செயற்பாடுகளில் நாம் ஈடுபட போவதில்லை.

நாட்டு மக்களுக்கு நாட்டின் ஆட்சி தேவையில்லை. நாட்டுக்கான சேவையே அவர்களுக்கு தேவை. அந்த சேவையை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது. அரசாங்கத்திடம் எந்தவிதமான மாற்றுத் தெரிவும் இல்லை. மாற்றுத் தெரிவு என்பது ஐக்கிய மக்கள் சக்திதான். இந்த நிலையில், ஊழல், மோசடிகளற்ற சிறந்த ஆட்சியை நடத்துவதற்கு தாம் தயாராகவே இருப்பதாக சஜித் பிரேமதாஸ இதன்போது அறிவித்தார்.

பொருளாதார பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்வைத்து, ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடன்
## ஜனாதிபதி கலந்துரையாடல்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சிலர் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி சாங்யோங் ரி. பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஏன்-மெரீ கல்டோ வூல்ப் மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான சர்வதேச நாணய நிதியத்தின் வசிப்பிட பிரதிநிதி கலாநிதி டுபாகஸ் பெரிடானு ஸெட்யாவன் ஆகியவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, மேலதிக செயலாளர் சந்திமா விக்கிரமசிங்க ஆகியவர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1684 | நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 15.03.2022 | தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
N 57 65 68 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 52,686,865/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.15
சீட்டிழுப்பு இல: 3845
வர்ணம்: இளநீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,663,540/-
வெற்றி இலக்கங்கள்
11 19 45 69
ஆங்கில எழுத்து P
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 147
சீட்டிழுப்பு திகதி 15.03.2022
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்
01 24 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 14,468,600/-
லக்ஷபதி வாசனா ரூபா. 100,000/- பரிசுக்குரிய விசேட இலக்கம் 424882
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,061,065/-
திகதி 15.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3396
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 02 05 08 21
மீனம்
6581 189
வெற்றி டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 16,264,405/-

12 லக்பதி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 38 01 08 32 66
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 222,324,583/-
சீட்டிழுப்பு வாரம் 860
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.03.15 செவ்வாய்க்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1510
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.15
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,735,980/-
வெற்றி இலக்கங்கள் 10 19 22 26
ஆங்கில எழுத்து J
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


மெகா பவர்
திகதி 15/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1055
வெற்றி எழுத்து T சுப்பர் இலக்க 04 வெற்றி இலக்கங்கள் 28 35 42 50

மஹஜன சம்பத
திகதி 2022/03/15
சீட்டிழுப்பு இலக்கம் 4707
ஆங்கில எழுத்து T வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 6 8 2 6 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.03.15
சீட்டிழுப்பு இலக்கம் - 737
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 15 21 71 81
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
17 – 08 – 1937

மறைவு
15 – 03 – 2022

# கிஸ்ணபிள்ளை ஆழ்வாப்பிள்ளை

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக இல. 249, ஆனந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கிஸ்ணபிள்ளை ஆழ்வாப்பிள்ளை அவர்கள் நேற்று (15.03.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிஸ்ணபிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் சுவாமிநாதன் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்னலட்சுமி, ஆறுமுகம் மற்றும் வைத்திலிங்கம் (ஓய்வுநிலை தபால் அதிபர்), சோதிமணி, சின்னராசா (ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, சோமாஸ்கந்தர் மற்றும் மகேந்திரன் (லண்டன்), இந்திரன் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மதனி (ஓய்வுநிலை ஆசிரியை - திருகோணமலை), செல்வரதி, கந்தவேல் (பொறியியலாளர் - கனடா), காலஞ்சென்ற சரவணபவா (டாக்டர்), பங்கயற்செல்வி (பேரவைச் செயலகம் - வடக்கு மாகாணம்), ஆழிவேல் (வவுனியா), உதயச்செல்வி (விவசாய அமைச்சு - வடக்கு மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மீனாட்சிசுந்தரம் (ஓய்வுநிலை பிரதி பிரதம செயலாளர் - நிதி, கிழக்கு மாகாணம்), ஸ்ரீதரன் வீரசிங்கம், நந்தினி (கனடா), சிவானி (வவுனியா), இந்திரஜித் (செயலாளர் - பதவிஸ்ரீபுர பிரதேச சபை, கிழக்கு மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவித்திரா (மாணவி-யாழ். பல்கலைக்கழகம்), சரண்யன் (மாணவன்), சர்வயன் (மாணவன்), நிலாவரசி (பொறியியலாளர்), நிலவன் (பொறியியல் பீடம் - மாணவன்), நிலாவினி (மாணவி), சஞ்சீவன் (கனடா), சஞ்சுகா (கனடா), தமிழரசி (எடிட்டர் - வவுனியா), சரணிகா (வவுனியா), பிரவீனா (வவுனியா), நிமோசாயன் (வவுனியா), ஹாஸ்வி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேரனும் சத்தியவதனி (வண்ணா - மருந்துக் கலவையாளர், கிளிநொச்சி), வசந்தி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.03.2022) புதன்கிழமை மாலை 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 249, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

(10658)

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.